விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆனி - 32 வெள்ளி 16.07.2021 மலர் - 2, இதழ் - 101

# ஹிந்து முஸ்லிம் டி.என்.ஏ. ஒன்றுதான்


விஜயபாரதம்

காங்கிரஸ் மூத்த தலைவரும், டெல்லி சட்டசபையில் ஐந்து முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தவருமான சவுத்ரி மத்தீன் அகமது, பாரதத்தில் உள்ள முஸ்லிம்கள் அனைவரும் ஹிந்துக்களின் சந்ததியினர்தான். இருவரும் ஒரே டி.என்.ஏவையே கொண்டுள்ளனர். இரு சமூகங்களுக்கிடையிலான சண்டைக்கும் பிளவுக்கும் அரசியல் மட்டுமே காரணம்.

எனது முன்னோர்கள் உத்தரபிரதேசம் தோடல்பூர் கிராமத்தில் வாழ்ந்த ஹிந்துக்கள். எனது தாய் ஒரு பிராமணர், தந்தை ரஜபுத்திரர். சுற்றியுள்ள இரண்டு கிராம மக்கள் ஒன்றாக முஸ்லிம் மதத்திற்கு மாறினர். அப்போது, எனது குடும்பமும் மாறியது. பாரதத்தில் வாழும் அனைத்து முஸ்லிம்களுக்கும் ஹிந்து மூதாதையர்கள் உள்ளனர். இதை நம்பாதவர்கள் வரலாற்று புத்தகங்களை படிக்க வேண்டும். இது மறுக்க முடியாத உண்மை' என்றார்.

முன்னதாக, ஹிந்துக்கள், முஸ்லிம்களின் டி.என்.ஏ ஒன்றுதான் என்று ஆர்.எஸ்.எஸ் தலைவர் டாக்டர் மோகன் பாகவத் சமீபத்தில் கூறியிருந்தார் என்பதும், பீகார் சிறுபான்மை நலத்துறை அமைச்சர் முகமது ஜமாகான், தனது மூதாதையர்கள் ராஜஸ்தானைச் சேர்ந்த ஹிந்து ரஜபுத்திரர்கள் என்றும் பின்னர் முஸ்லிமாக மதம் மாறினர் என்று தெரிவித்திருந்தார் என்பதும் நினைவு கூரத்தக்கது.



# சங்கமே பிரதானம்

தற்போது பெங்களூருவில் வசித்து வரும் நமது சென்னையை சேர்ந்த ஆர்.எஸ்.எஸ் மூத்த கார்யகர்த்தரான டி.வி ராஜகோபால், சங்க வேலை ஒன்றே தாரக மந்திரமாகக் கொண்டு வாழ்ந்து வருபவர். அவர் தனது மொத்த சேமிப்பையும் ஆர் எஸ் எஸ் தொண்டர்களால் பெங்களூருவில் நடத்தப்படும் திஷா அறக்கட்டளைக்கு தன் குடும்பத்துடன் நேரில் சென்று வழங்கினார்.

# அறநிலையத்துறை மீது நீதிமன்றம் அதிருப்தி



விஜயபாரதம்

சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள அகத்தீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான நில ஆக்கிரமிப்பு சம்பந்தமான வழக்கில் விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், கடந்த 2019ம் ஆண்டிலேயே ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவிட்டது. ஆனால், ஆக்கிரமிப்புகள் அகற்றப்படாததால் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கு விசாரணையில், கோயிலுக்குச் சொந்தமான நிலத்தின் அளவும், மீட்டதாக அரசு தெரிவிக்கும் அளவும் முரணாக இருப்பதாக மனுதாரர் தெரிவித்தார். இதையடுத்து, கோயிலுக்குச் சொந்தமான நிலம் எவ்வளவு, ஆக்கிரமிக்கப்பட்ட நிலம் எவ்வளவு, மீட்கப்பட்ட நிலம் எவ்வளவு? என, அறிக்கைத் தாக்கல் செய்ய ஹிந்து சமய அறநிலையத்துறைக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும், கோயில் நிலங்களைப் பாதுகாப்பதிலும், ஆக்கிரமிப்புகளை மீட்கும் நடவடிக்கைகளிலும் அறநிலையத்துறை அதிகாரிகள் அஜாக்கிரதையாகச் செயல்படுகின்றனர். ஆக்கிரமிப்புகளை மீட்க உரிய வழிமுறைகளை எடுக்காவிட்டால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்து, வழக்கை இரண்டு வாரங்களுக்குத் தள்ளி வைத்தனர்.

---

# கட்டாய கல்வி கட்டணம் நிர்ணயம்



விஜயபாரதம்

மத்திய அரசின் கட்டாய கல்வி உரிமை சட்டத்தின்படி, தமிழகத்தில் சிறுபான்மையினர் அல்லாத அனைத்து தனியார் பள்ளிகளிலும், 25 சதவீத இடங்களில் மாணவர்கள் கட்டணம் இன்றி சேர்க்கப்படுகின்றனர். இத்திட்டத்தில் சேரும் மாணவர்கள், அதே பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை, கட்டணமின்றி படிக்கலாம். அவர்களுக்கான கட்டணத்தை, தமிழக அரசே வழங்கும். அவ்வகையில், வரும் ஆண்டுகளில் கல்வி கட்டணமாக, எல்.கே.ஜி, யு.கே.ஜி, ஒன்றாம் வகுப்புக்கு 12,500, இரண்டாம் வகுப்பு 12,449, 3ம் வகுப்பு 12,579, 4ம் வகுப்பு, 12,585, 5ம் வகுப்பு 12,832, 6ம் வகுப்பு, 17,078, 7ம் வகுப்பு 17,107 மற்றும் 8ம் வகுப்புக்கு 17,028 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் அரசு தரப்பில் கல்வி கட்டணத்தை அப்பள்ளிகளுக்கு வழங்கும் என கூறப்பட்டுள்ளது.

# தி.மு.கவினர் வாரிசுகள்



விஜயபாரதம்

தி.மு.கவையும் வாரிசு பிரச்சனையையும் எக்காலத்திலும் பிரிக்கமுடியாது. அது தொடர்கதை. இதற்குகு பல்லாயிரம் உதாரணங்கள் உள்ளன. சமீபத்தில், பாளையங்கோட்டையில் எண்ணாயிரத்தம்மன் கோவில் திருவிழா நடைபெற்றது. அப்பொழுது தி.மு.க ஒன்றியச் செயலாளர் தங்கப்பாண்டியனின் மகன் சுபாஷ் என்பவருக்கும் அதே பகுதியை சேர்ந்த பூபதி என்பவருக்கும் தகராறு ஏற்பட்டது. இதனால் சுபாஷ், தன் அடியாட்களுடன் பூபதி வீட்டிற்கு சென்று அவரை இரும்பு கம்பிகளால் தாக்கியுள்ளார். அவரது வீட்டில் உள்ள பொருட்களையும் அடித்து உடைத்து சேதப்படுத்தியுள்ளார். இதையடுத்து பூபதி அளித்த புகாரின் அடிப்படையில் சுபாஷ் உட்பட 14 பேரை காவல்துறையினர் கைது செய்தனர். மற்றொரு சம்பவத்தில், கடலூர் மாவட்டத்தில் தி.மு.கவை சேர்ந்த கொத்தட்டை ஊராட்சி மன்றத் தலைவரான கொளஞ்சி நாதனின் மகன் வசந்த குமாருக்கு ஏற்கனவே திருமணமாகி இரண்டு குழந்தைகள் உள்ளனர். ஆனாலும் அவர் எதிர் வீட்டு பெண்ணுடன் நெருக்கமாக பழகியுள்ளார். இதனால் கர்பமடைந்த அந்த பெண் திருமணம் செய்துக்கொள்ள வற்புறுத்தியுள்ளார். வீட்டிற்கு தெரியக்கூடாது என்பதற்காக, அப்பெண்ணுக்கு சில ஆட்கள் கருக்கலைப்பு செய்துள்ளார் வசந்த குமார். இதனால் ரத்தப்போக்கு அதிகமாகி அந்த பெண் இறந்துவிட்டார். இதனையடுத்து, வசந்த குமார் உட்பட எட்டு பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.


# சட்டவிரோத கிறிஸ்தவ மறுவாழ்வு மையம்



விஜயபாரதம்

பெங்களூரு சிக்கபெல்லந்தூரில் அமைந்துள்ள 'ஷாலோம் விவிலிய பாப்திஸ்ட் சர்ச்' கிறிஸ்தவ மறுவாழ்வு மையத்தில் இருந்து நான்கு பெண் குழந்தைகள் உட்பட ஐந்து குழந்தைகளை 'சைல்ட்லைன் இந்தியா' அறக்கட்டளை மீட்டுள்ளது. அவர்கள் இந்த மையத்தை நடத்தத் தேவையான உரிய அனுமதியோ அல்லது பதிவோ இல்லாமல் சிறுவர், சிறுமியர் என மொத்தம் 14 பேரை அடைத்து வைத்திருந்தது தெரிய வந்துள்ளது. இது குறித்த புகாரின் அடிப்படையில், பெங்களூரு காவல்துறையினர் ஷாலோம் விவிலிய பாப்டிஸ்ட் சர்ச் மற்றும் அதன் தலைவர்கள் மீது சிறார் நீதிச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளனர். மீட்பு மையத்தில் ஒரு பெண் பராமரிப்பாளர் கூட இல்லை என்று சைல்ட்லைன் இந்தியா அறக்கட்டளை குற்றம் சாட்டியது.

# நிர்வாகத் திறமையற்ற மாநிலங்கள்



விஜயபாரதம்

தடுப்பூசி பற்றாக்குறை உள்ளது என்று தமிழகம், டெல்லி, மேற்கு வங்கம் உட்பட சில மாநிலங்கள் தொடர்ச்சியாக குறை கூறி வருவதற்கு மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து தனது டுவிட்டர் பதிவில், 'மாநிலங்களுக்கு மத்திய அரசு தடுப்பூசிகளை அனுப்புகிறது. அவை தீருவதற்கு முன்னர் தகவல் தெரிவிக்க மாநில அரசுகளுக்கு மத்திய அரசு சில அறிவுரைகளை வழங்கி உள்ளது. ஆனால், திட்டமிட்டபடி மாநில அரசுகள் செயல்படாமல், தடுப்பூசி பற்றாக்குறை நிலவுவதாக பொதுமக்கள் மத்தியில் தேவையற்ற பீதியையும் குழப்பத்தையும் உருவாக்கி வருகின்றன. தடுப்பூசியை நிர்வகிக்கும் விஷயத்திலும் சில மாநிலங்கள் சரியாக செயல்படுவதில்லை. ஆனால், அவை ஒன்றுக்கும் உதவாத அறிக்கைகளை வெளியிடுகின்றன. ஒவ்வொரு மாநிலமும் எவ்வளவு தடுப்பூசிகளை பெறும், எப்போது பெறும் என்ற தகவல்கள் முன்கூட்டியே அளிக்கப்படுகின்றன. மத்திய அரசு அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது. மாநில அரசுகள்தான் மக்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு திட்டமிட்டு செயல்பட வேண்டும். இது அவர்களின் நிர்வாக திறமையின்மையையே வெளிப்படுத்துகிறது. இது, பிரச்சினை என்ன, அதற்கு யார் காரணம் என்பதையும் தெளிவாக விளக்குகிறது' என தெரிவித்தார்.

# வேளாண் கடன் தள்ளுபடி



விஜயபாரதம்

கர்நாடகாவில் வறுமை கோட்டுக்கு கீழே வாழ்வோருக்கான ரேஷன் அட்டை வைத்துள்ள குடும்பத்தில் கொரோனா தொற்றுக்கு பலியாகி இருந்தால் ரூ.1 லட்சம் நிவாரணம் வழங்குவதாக முதல்வர் எடியூரப்பா ஏற்கெனவே அறிவித்துள்ளார். இந்த நிலையில், கொரோனா தொற்றால் பலியான விவசாயிகள் பெற்றுள்ள வேளாண் கடன்களை தள்ளுபடி செய்ய அரசு முடிவெடுத்துள்ளது. கர்நாடகாவில் கடன் பெற்ற விவசாயிகளில் 10,187 பேர் தொற்றினால் உயிரிழந்து உள்ளனர். அவர்களின் குடும்பத்தின் நிதி சுமையை குறைக்கும் வகையில் இறந்த விவசாயிகள் பெற்ற ரூ.79.47 கோடி கடன் தள்ளுபடி செய்யப்படுகிறது என கர்நாடக கூட்டுறவுத் துறை அமைச்சர் சோமசேகர் தெரிவித்துள்ளார்.


# முஸ்லிம் மதகுருவின் பேச்சு



விஜயபாரதம்

கேரளாவை சேர்ந்த முஸ்லீம் மதகுரு சாலிஹ் பத்தேரி என்பவர், 'இரவு 9 மணிக்குப் பிறகு வெளியே செல்லும் பெண்கள் விபச்சாரிகள். அவர்கள் கொல்லப்பட வேண்டும்' என பேசியுள்ளார். பார்ப்பதற்கு ஒரு குழந்தையைப் போல தோற்றமளிக்கும் சாலிஹ்ஹின் உண்மை வயது 27. சௌமியா என்ற சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்த கோவிந்தாசாமி என்பவர், நீதிமன்றத்தில், 'சௌமியா இரவில் பயணம் செய்ததால் அவரை பாலியல் பலாத்காரம் செய்தேன்' என கூறினார். இவரது கருத்தை சாலிஹ் பத்தேரி நியாயப்படுத்துவதுடன் அந்த வழக்கை விசாரித்த நீதிபதியையும் நீதிமன்றத்தையும் விமர்சித்தார். இந்த வைரல் வீடியோ கேரளாவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. சாலிஹ் பத்தேரியின் இந்த ஆட்சேபமான கருத்துகள் தொடர்பாக காவல்துறை இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

# தொடரும் ஜல் ஜீவன் சாதனை




விஜயபாரதம்

மத்திய குடிநீர் அமைச்சகமான ஜல் சக்தி, மக்களுக்கு சுகாதாரமான மற்றும் போதுமான குடிநீர் வழங்க 'ஜல் ஜீவன்' திட்டத்தை கடந்த 2019ல் துவங்கியது. ஜல் சக்தி அமைச்சகத்தின் அறிக்கையின்படி, 'கொரோனா தொற்று, பொதுமுடக்கம் அமலில் இருந்த போதும், ஜல் ஜீவன் திட்டம் கடந்த 23 மாதங்களில் புதிதாக 4.49 கோடி குழாய் குடிநீர் இணைப்புகளை வழங்கியுள்ளது. நாடு முழுவதும் ஒரு லட்சம் கிராமங்களில் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 71 மாவட்டங்கள், 824 வட்டங்கள், 50,309 கிராம பஞ்சாயத்துகளில், 1,00,275 கிராமங்களில் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் என்ற இலக்கு எட்டப்பட்டுள்ளது' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உ.பி.யில் 3 பயங்கரவாதிகள் கைது



விஜயபாரதம்

உத்தரப் பிரதேசத்தில் சில நாட்களுக்கு முன், பயங்கரவாத தடுப்புப் படையினர் நடத்திய சோதனையில், அல் குவைதா பயங்கரவாதிகள் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், உ.பியில் சில இடங்களில் மனித வெடிகுண்டு தாக்குதல்கள் நடத்த திட்டமிட்டிருந்தது தெரிய வந்தது. இதையடுத்து, அம்மாநில காவல்துறையினர் தேடுதல் வேட்டை நடத்தினர். லக்னோ வாசிர்கஞ்ச் பகுதியை சேர்ந்த, ஷகீல், கேம்ப்வெல் சாலையை சேர்ந்த, முகமது மொய்தீன், முசாபர் நகரை சேர்ந்த, முகமது முஸ்திகீம் ஆகிய, மூன்று பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மூவரும் அல் குவைதா இயக்கத்தின், 'அன்சார் கஸ்வதுல் ஹிந்த்' என்ற அமைப்பை சேர்ந்தவர்கள் என்பதும், சுதந்திர தினத்துக்கு முன், தலைநகர் லக்னோ உட்பட மாநிலத்தில் பல பகுதிகளில் குண்டுவெடிப்பு சம்பவங்களை நடத்ததிட்டமிட்டிருந்ததும் விசாரணையில் தெரிய வந்தது. இதனையடுத்து, மாநிலம் முழுவதும் காவல்துறையினர் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

---

# வாரணாசியில் மோடி



விஜயபாரதம்

தனது தொகுதியான வாரணாசிக்கு நேற்று சென்ற பிரதமர் மோடி, பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழகத்தில் 100 படுக்கைகள் கொண்ட தாய் சேய் மருத்துவ பிரிவு, கோடவுலியாவில் பல அடுக்கு வாகன நிறுத்தம், கங்கை நதியில் ரோரோ படகுகள் மூலம் சுற்றி பார்க்கும் திட்டம், வாரணாசி காசிப்பூர் மூன்று வழி மேம்பாலங்கள், ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் 143 கிராமப்புற குடிநீர் மற்றும் ஊரக திட்டங்கள், ருத்ராக் என்ற சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் மாநாட்டு மையம் வீட்டுத் தோட்ட வளர்ச்சி திட்டம் உள்ளிட்ட பல்வேறு நலத் திட்டங்களை துவக்கி வைத்தார். இதன் மூலம், ரூ. 744 கோடி மதிப்பிலான திட்டங்களை பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும், ரூ. 839 கோடி மதிப்பு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. தொடர்ந்து நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி, 'கொரோனா பெருந்தொற்றை எதிர்த்து, பாரதத்தின் மிகப்பெரிய மாநிலமான உத்திர பிரதேசத்தில், அரசு மிகச் சிறப்பாக செயல்பட்டது. அரசு எடுத்த நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை. நாட்டில் அதிகம் பேருக்கு, உ.பியில் தான் தடுப்பூசி போடப்பட்டுஉள்ளது. அனைவருக்கும் இலவச தடுப்பூசி என்பதே அரசின் இலக்கு' என்று கூறினார்.

# நடிகை மீது அவதூறு வழக்கு



விஜயபாரதம்

பிரபல பாலிவுட் நடிகை கரீனா கபூர் கான், தனது இரண்டு மகப்பேறு கால அனுபவங்களைத் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட முடிவு செய்துள்ளார். அதற்கு அவர் வைத்த பெயர் 'பிரகனன்சி பைபிள்'. வெளியாகும் முன்பே, பல்வேறு சர்ச்சைகளையும் எதிர்பார்ப்பையும் இந்த புத்தகம் ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், மகாராஷ்டிராவில் உள்ள 'ஆல்பா ஒமேகா கிறிஸ்டியன் மகாசங்' என்ற கிறிஸ்தவ அமைப்பின் தலைவரான ஆஷிஷ் ஷிண்டே, காவல் நிலையத்தில் இந்த புத்தகத்தின் தலைப்பு, கிறிஸ்தவ மத புனித நூலான பைபிளையும் கிறிஸ்தவர்களின் மத உணர்வுகளையும் புண்படுத்துகிறது எனவே, கரீனா கபூர் கான் மீது ஐ.பி.சி பிரிவு 295ஏ'வின் கீழ் வழக்கு பதிவு செய்ய வேண்டும் என கோரி புகார் மனு அளித்துள்ளார்.

# சகோதரி லூசியின் சட்டப்போராட்டம்



விஜயபாரதம்

கேரளாவில், பிராங்கோ மூலக்கல் என்ற பாதிரியால் கன்னியாஸ்திரி கற்பழிக்கப்பட்ட வழக்கில், அந்த கன்னியாஸ்திரிக்கு ஆதரவாக இருந்த ஐந்து கன்னியாஸ்திரிகளில் ஒருவரான சகோதரி லூசி கலாபுரா, இதற்காக போராடினார். கத்தோலிக்க திருச்சபையின் உயர்மட்ட நீதித்துறை அமைப்பான அப்போஸ்டோலிகா இவரது முறையீட்டை நிராகரித்தது. வாடிகனும் இவரை விசாரிக்காமலேயே இவரது முறையீட்டை நிராகரித்தது. இதனையடுத்து, அவர் சர்ச்சிலிருந்து நிரந்தரமாக வெளியேற்றப்பட்டார். இது குறித்த தனது வழக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அவர், 'நானே என்னை இந்த நீதிமன்றத்தில் பிரதிநிதித்துவப் படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை, ஏனெனில் எந்தவொரு வழக்கறிஞரும் எனது வழக்கை எடுத்துக் கொள்ள மாட்டார்கள், ஒட்டுமொத்த கிறிஸ்தவ சமூகமும் எனக்கு எதிராக திரும்பியுள்ளது. வேறு எந்த பெண்ணையும் இவர்கள் என்னைப்போல தெருவில் தூக்கி எறியக்கூடாது என்பதற்காகவே நான் இந்த முடிவை எடுத்துள்ளேன்' என கூறினார்.

# ஜப்பான் மீது அணுகுண்டு போடுவோம்



விஜயபாரதம்


சீனாவின் 'லியு ஜுன் தாவோ லூ' என்ற ராணுவ சேனலில் பதிவேற்றப்பட்ட வீடியோ ஒன்றில், 'ஜப்பான் தைவானை ஆதரிக்கக்கூடாது. ஒருவேளை ஜப்பான் தைவானுக்கு ஆதரவாக ஒரேஒரு சிப்பாயை களம் இறக்கினாலும், சீனா ஜப்பான் மீது முழு அளவிலான போரை துவங்கும், அணுகுண்டுத் தாக்குதல் நடத்தப்படும். அத்தாக்குதல், ஜப்பான் சரணடையும்வரை நீடிக்கும். டையோயு தீவுகள், ரியுக்யு தீவுகளை மீண்டும் கைப்பற்றுவோம். நாங்கள் அவற்றை நிர்வகிப்போம்' என கூறப்பட்டிருந்தது. இது சமூக வலைத்தளங்களில் பரவியதையடுத்து அந்த சேனல் அவசராவசரமாக அந்த வீடியோவை நீக்கியது.

# பாகிஸ்தானில் சிறார் மதமாற்றம்

பாகிஸ்தான் அரசு, 18 வயதுக்கு குறைவானவர்களை மதமாற்றம் செய்வதற்கு கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கும் நாடாளுமன்றக் குழுவின் யோசனையை எதிர்த்து வருகிறது. பாகிஸ்தானின் மத விவகார அமைச்சர் நூருல் ஹக் காத்ரி, பேசியபோது, ‘18 வயதிற்கு முன்னர் மத மாற்றம் நடந்ததற்கு இஸ்லாத்தில் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. குழந்தைகள் மதம் மாற விரும்பினால், அது அவர்களின் விருப்பம். திருமணத்திற்கான குறைந்தபட்ச வயது வரம்பை நிர்ணயிப்பது தொடர்பான குறிப்புகள் இஸ்லாமிய சித்தாந்த கவுன்சிலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. யாராவது சிந்துவில் மற்றவர்களை வலுக்கட்டாயமாக மாற்றினால் அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்படும், மியான் அப்துல் ஹக் என்பவர் தொடர்ந்து கட்டாய மதமாற்றம் செய்து வருகிறார். அவர் விசாரிக்கப்படுவார்’ என தெரிவித்தார்.

விஜயபாரதம்



# தன்ராஜ் பிள்ளை



விஜயபாரதம்

இந்திய ஹாக்கி அணியின் முன்னணி நட்சத்திரமாக சுமார் 16 ஆண்டுகள் இருந்தவர் தன்ராஜ் பிள்ளை. புனே நகருக்கு அருகில் உள்ள கட்கி என்ற ஊரில் தமிழர் குடும்பத்தில் பிறந்தவர் தன்ராஜ் பிள்ளை. அவரது தந்தை ஹாக்கி ஸ்டேடியத்தை பராமரிப்பவர். தந்தையுடன் ஹாக்கி ஸ்டேடியத்துக்கு அடிக்கடி சென்ற தன்ராஜ் பிள்ளை, இந்த விளையாட்டில் ஆர்வம் கொண்டார். உடைந்துபோன பழைய ஹாக்கி மட்டைகளைக் கொண்டு, ஹாக்கி விளையாடி பயிற்சி பெற்றார்.

சிறுவயதில் உள்ளூரில் ஏற்பட்ட சிறு பிரச்சினையில், போலீஸார் தன்னை கைது செய்து விடுவார்களோ என்று அஞ்சிய தன்ராஜ் பிள்ளை, தனது அண்ணனுடன் மும்பைக்கு இடம் பெயர்ந்தார். அங்குள்ள ஹாக்கி மைதானங்களில் பயிற்சி பெற்றார்.

இந்திய ஹாக்கி வீரர்களிலேயே 4 ஒலிம்பிக் போட்டிகள், 4 உலகக் கோப்பை போட்டிகள், 4 சாம்பியன்ஸ் கோப்பை போட்டிகள், 4 ஆசிய விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றில் விளையாடிய ஒரே ஹாக்கி வீரர் தன்ராஜ் பிள்ளை. அவரது தலைமையின் கீழ் 1998ம் ஆண்டில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியிலும், 2003ல் நடந்த உலகக் கோப்பை ஹாக்கி போட்டியிலும் பாரதம் வெற்றி வாகை சூடியது. ராஜீவ் காந்தி கேல் ரத்னா, பத்ம ஸ்ரீ உள்ளிட்ட விருதுகள் பெற்றுள்ளார் தன்ராஜ்.

பாங்காக் ஆசியாட் போட்டிக்கு பிறகு மூத்த வீரர்களுக்கு ஓய்வளிக்கும் விதமாக ஹாக்கி தேர்வுக்குழு, அவருடன் சேர்த்து சிலரை அடுத்த போட்டிக்கு தேர்ந்தெடுக்கவில்லை. இதில் அவரது கோபம் சர்ச்சையை ஏற்படுத்தியது. இப்படி சில சர்ச்சைகளில் சிக்கிய தன்ராஜ் பிள்ளை, மெர்குரியல் (கோபம் உள்ளிட்ட எதிர்பாராத திடீர் மாற்றங்கள்) மனிதர் என்று வர்ணிக்கப்பட்டவர்.

1998ல் நடந்த ஆசிய விளையாட்டு போட்டியின்போது, சரியாக கோல்கீப்பிங் செய்யவில்லை என்று கூறி, அப்போதைய கோல் கீப்பரான ஆசிஷ் பல்லாலை மாற்றினார் தன்ராஜ் பிள்ளை. ஆனால், இதே போட்டியில் பெனாலிடி ஷூட் அவுட் முறையில் சிறப்பாக கீப்பிங் செய்து தன் திறமையை நிரூபித்தார் ஆசிஷ் பல்லால். பிறகு, தன் தவறை உணர்ந்து அவரிடம் மன்னிப்பு கேட்டார் தன்ராஜ் பிள்ளை. பாரதத்திற்காக 339 போட்டிகளில் ஆடிய அவர், 160 கோல்களை அடித்துள்ளார்.

லக்ஷ்மணன்

# வலையில் சிக்கிய மீம்கள்






# காவலர்களை மிரட்டும் தி.மு.க. மணல் மாபியா



விஜயபாரதம்

மணல் கடத்திய திருச்சி, மணப்பாறை ஒன்றிய தி.மு.க., பொறுப்பாளரான ஆரோக்கியசாமியின் டிப்பர் லாரிகள், ஜே.சி.பி.,யை பறிமுதல் செய்தனர் காவல்துறையினர். 3 ஓட்டுனர்களையும் கைது செய்தனர். ஆனால், அரசியல் அழுத்தத்தால் இன்ஸ்பெக்டர் அவற்றை விடுவித்தார். இது குறித்த புகார் டி.ஜி.பிக்கு சென்றது. இதனால், அந்த வாகனங்களை மீண்டும் பறிமுதல் செய்யவும் ஓட்டுனர்களை கைது செய்யவும் ஆரோக்கியசாமியின் இடத்துக்கு சென்ற பெண் டி.எஸ்.பி., மற்றும் இன்ஸ்பெக்டரை, உங்களால் முடிந்ததை பாருங்கள் என கூறிய ஆரோக்கியசாமி, அவர்களை நான்கு மணி நேரம் அலைக்கழித்துள்ளார். அமைச்சர் நேருவின் பெயரை சொல்லி மிரட்டியுள்ளார். மேலும், ஸ்ரீரங்கம் தி.மு.க எம்.எல்.ஏ., பழனியாண்டி இருதரப்புக்கும் பஞ்சாயத்து செய்துள்ளார். இதனையடுத்து இரண்டு பழைய வாகனங்களை மட்டுமே தர ஒப்புக்கொள்ளப்பட்டு வழக்கு மாற்றி பதிவு செய்யப்பட்டுள்ளது. தி.மு.கவினரின் இந்த அடாவடி சம்பவம், மக்கள் மற்றும் காவல்துறையினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. பதவி ஏற்கும்போது கொடுத்த உறுதிமொழியின்படி, கட்சியினரின் இது போன்ற சட்டவிரோத செயல்களை, முதல்வர் ஸ்டாலின் இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும்' என மக்கள், காவலர்கள், எதிர்கட்சியினர் என அனைத்துத் தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர்.


## விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க

www.vijayabharatham.org

என்ற இணையதளம் அல்லது

044 - 26420870 என்ற தொலைபேசி

எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

93613 99006